[Registered No. M. 329.]

VOL. I. JULY 1902. No. 3.

THE

Suguna Sundaram

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

" சற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி."—குறள்.

CONTENTS.	PAGE.	அட்டவணை.	பக்கம்.
1 Preaching of religious story.	50	1 கதாப்பிரசங்கம்.	50
2 Subhashani (by T. P. Visvanatha Pillai.)	52	2 சுபாஷணி டி. பி. விசுவநாத பிள்ளை.	52
3 Chamelion (by T. A. Swaminatha Iyer B. A.,	57	3 பச்சோந்தி (டி. ஏ. சுவாமிநாதய்யர் பி. ஏ)	57
4 A moral story.	60	4 ஓர் நீதிக்கதை.	60
5 A wonderful vision.	64	5 ஓர் ஆச்சரியமான நிகழ்ச்சி,	64
6 General News.	65	6 சமாசாரக்குறிப்புகள்.	65
7 Hints on sanitation.	67	7 சுகாதாரவிளக்கத்தைப்பற்றிய விசேஷக்குறிப்புகள்.	67
8 Thirthapuri. by (T. P. V.)	68	8 தீர்த்தபுரி (டி. பி. வி.)	68

Published by

T. S. SUBBARAMA AIYER, Inamdhar.

Yearly Subscription Rs. 3—0—0

TURAIYUR.

All Rights Reserved.

Half Yearly Subscription. Rs. 1—12—0.

PRINETD AT THE DODSON PRESS, TRICHINOPOLY.

NOTICE.

Although th[illegible]e are several journals world-wide, yet we request the learned public to le[illegible]lping hand towards the advancement of this journal also.

அறிவிப்பு.

உலகிலுள்ள ஜனங்கள் புருஷார்த்தங்களை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள், தருமாதிகளை அன்னோருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு சஞ்சரிப்பவைகள் பல உளவாயினும், வித்வான்கள் பாஷையும் நல்லொழுக்கமும் அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இந்நூதனத்தமிழ்ப் பத்திரிகையையும் ஆதரிப்பதற்குக்கடமைப்பட்டிருத்தலால், அத்தகைய கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி செய்வார்களென நம்புகிறோம்.

1 திரவிடமா பாடியத்தாராதி முனிபுங்கவர்கள்
பரவாவடுதுறை வாழ்பண்பார்—குருமரபுக்
கோர்தீபமாகி யொளிரம்பலவாணப்
பேரானடி யெமக்குப்பேறு.

2 ஆதலினீ யன்னோனடிக்கமலஞ் சென்றிறைஞ்சப்
போதுதியேலஞ்சுகுண சுந்தரதா—வாதவருட்
குன்றன்னோ சிதரக்கொண்டிக்கு வலயத்திற்
சென்றிருமாந்தே திரியலாம்.

ஆற்றுப்படை.

1 வேற்கரசே யென்ன விபுர்தமைக்காத்தருளும்
பாற்கர சேதுபதித்துரையைப்—போற்றுதியேல்
இன்புற்றுவாழ் சுகுணசுந்தர விம்மேதினியில்
வன்புற்றுச் சூழ்ந்துவரலாம்.

வேண்டுகோள்.

2 ஏதுபதிச்செல்வா மென்றெண்ணியிடருழக்கு
மாதுலர்போலுஞ் சுகுண சுந்தரநின்—சீத
மதிக்குடைக்கீழ் தங்கமதுர மொழிச்சேது
பதிப்பாற் கரதுரைகண்பார்.

ஆற்றுப்படை

4 அறுசுவைபோலென்று மவனியுளோராயப்
பெறு சுகுணசுந்தர நீபெட்பி—னுறுதற்
குரைத்தேவர் பாலெனுலகு புகழ்பாண்டித்
துரைத்தேவர் பாலடைந்து சொல்.

உ

சுகுணசுந்தரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வாலம் 1. 1902ஞு ஜூலை. நி. 3.

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage			Rs.	3—0—0
Half yearly	,,	,,	,,	1–12—0
Quarterly	,,	,,	,,	0–14—0
Single copy	,,	,,	,,	0—5—0
Back numbers		,,	,,	0—6—0

Foreign Subscription 6. S. Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entitle them to the discount aforesaid. A copy will be supplied *gratis* to those who collect not less than 10 Subscribers at a time.

A copy will be sent free to those who contribute articles to the Journal.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

☞ The Managing Proprietor reserves to himself the right of republishing all matters that appear in this journal. All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Managing Proprietor,
SUGUNA SUNDRAM OFFICE,
Turaiyur,
Musiri Taluk,
TRICHY DT.

சந்தாவிவ்ரம்.

ஞு 1க்கு தபால்கூலிஉள்பட		ரூ.	3—0—0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1–12—0
மூன்றுமாதத்திற்கு	,,	,,	0–14—0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0—5—0
பழய பிரதி	,,	,,	0—6—0

இப்பத்திரிகைக்கு மேமீ முதல் சந்தாக்கணக்கு வைக்கப்படும். மே மாதத்துக்குள் சந்தாத்துகையை முன் பண்மாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச்சந்தாவில் அணு 8ம், ஆறுமாதச்சந்தாவில் அணு 4ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒரு மாதத்தவணையுங் கொடுக்கப்படும். பத்து கையொப்பக்காரர்களை ஒரேதடவையில் சேர்த்தனுப்புவோர்களுக்கு, மாதந்தோறும் ஒரு புத்தகமனுப்பிவரப்படும். விஷயங்களெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனுமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்த பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்தயோக்யதை யுடையவைகளாயிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக்கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந்தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெளிப்படுவதற்குரிய விஷயங்களை, எழுதியனுப்பினோர் அனுமதியை எதிர்ப்பாராமலே அச்சிடுவதற்கு எமக்கு சுதந்திரமுண்டு.

மானேஜிங் புரோப்ரைட்டர்,
சுகுண சுந்தரம் ஆபீசு, துறையூர்.

கதாப்பிரசங்கம்.

இவ்வாறு உஞ்சவிருத்திசெய்தபின் ஒவ்வொருவருமன்பினுல் கொடுக்கின்ற தண்டுல முதலியவைகளைக்கொண்டு வரப்பட்ட பிராமணர்களுக்கு சந்தர்ப்பணை செய்வார். அன்றன்றைக்குக்கிடைக்கும் சாமக்கிரியைகளில் மறுநாளைக்கு வேண்டுமென்னுங்கருத்தால் சேஷம் வைக்கிறவழக்கமே அவர்க்கின்று. போஜனனந்தரம், சிஷ்யர்சட்குப் பாடஞ்சொல்வதும், சாஸ்திரபரிசீலனை செய்வதுமாக மாலைப்பொழுது வரையில் காலங்கழிப்பர். இராக்காலங்களில் பகவானுடையவும், பக்தர்களுடையவும் சரித்திரங்களைக் கர்ணாமிருதமாய்ச்செய்து கேட்போரை பக்தி பிரவாகத்திலும் கானப்பிரவாகத்திலுமூழ்கச்செய்வார். இவர் திரவிய பிரயோஜனத்தை யுத்தேசித்துக் கதைசெய்கிற வழக்கமின்றாயினும், அக்கிரகாரவாஸிகளெல்லோரும் அவர் கிரகத்தைத் தங்கிரகங்கள்போலவே பரிபாலனஞ்செய்வார்கள். இதனால் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா பகவத் கீதையில் "மெய்யையான பக்தனுடைய குடும்ப பாரத்தை யானே வகிக்கின்றேன்," என்று சொல்லியதற்கு இவரையே சாட்சியாகக்கொண்டு இவர் குடும்ப கிருத்யங்களைத்தாம் வகித்து நடத்திவந்தனர்போலும். இவ்வண்ண நடந்துவருபவர்களன்றோ பாகவதோத்தமர்கள்.

தற்காலத்தில் மன்னார்குடியில் கோபால பாகவதர் என்பவர் ஒருவர் வசிக்கின்றனர். அவருக்குமேலே சொல்லியபாகவதரின் பெயரமைந்தாற்போலவே, மற்றைய அனுஷ்டான நடவடிக்கைகளும் சற்றேறத்தாழ அமைந்திருக்கின்றன. அவர் ஒருசமயத்தில் சுமார் மூன்று வருஷங்கட்குமுன், திருச்சினப்பள்ளியில் குஜிலித்தெருவில் அஷ்டபதியில் ராதாகிருஷ்ண லீலையை கானத்துடன் உபந்யசித்தனர். அவ்வஷ்டபதி முற்றும் சப்தத்தால் சிருங்காரரசத்தைஒழுக்குவதாயிருப்பினும், அவர்சொல்லுமர்த்த சாதுர்யத்தால் சிரவணம பண்ணுபவர்க்கு பக்தியையே மேன்மேலும் விளைத்து உருகப்பண்ணிற்று. இதனால்,

"ஆரணங்காணென்பரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங்காணென்பர் சாமுகர்காம நன்னூலதென்ப
ரேரணங்காணென்பரெண்ண ரெழுத்தென்பரின் புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே"

என்றபடி, கதைசெய்யும் பாகவதர்கள் இயல்புக்குத்தக்கபடி பக்திரஸமுள்ளவைகள் காமரஸமாகவும், காமரஸமுள்ளவைகள் பக்திரஸமாகவு மாறிப் போய் விடுகின்றன.

இக்காலத்தில் பிரசித்தி பெற்று விளங்குகின்ற தஞ்சைவாசி கிருஷ்ணபாகவதர் அவர்கள், சென்னை திருவல்லிக்கேணியில் வசிக்கும், பாலக்காடு அநந்தராமபாகவதர் அவர்கள், ஷை ஸ்தலத்தில் வசிக்கும் லக்ஷ்மணாசாரியார் அவர்கள், தில்லைஸ்தானம் நரஸிம்ம பாகவதர் அவர்களாகிய இப்புண்ணிய சீலர்கள், "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து," என்னும் ஒளவையார் வாக்கின்படி சர்வசாஸ்திரஞ்ஞர்களாகிய சாதுக்கள் நிரம்பியுள்ள சென்னைமாநகரில் அன்னோரால் நன்குமதிக்கப்பெற்று வருவதே அவர்களுடைய மேன்மையைத் தெரிவிக்கின்றது.

துறையூரில் கிருஷ்ணராஜபுரம் சுந்தரபாகவதர் அவர்கள் கதாப் பிரசங்கத்தை மெச்சி ஐந்தாறு வருஷகாலமாய் ஜமீன்தார் செட்டிக்குளம் பிரஸன்ன வெங்கிடாசலரெட்டியார் துரையவர்கள் அப்போதைக்கப்போது சம்மானஞ்செய்து வருவதுமன்றி, அப்பாகவதர் பெண்குழந்தைகட்குக் கன்னிகாதானச்செலவிற்கு ஆயிரரூபாய் வரையில் உபகரித்துத் தாமே வந்திருந்து நடத்திக்கொடுத்தனர். கிராமஜனங்களும் அவர்மீது மிக்க அன்பு பாராட்டி வருகின்றனர். இவரும், கிருஷ்ணர், 'நான் பக்தபராதீனன்,' என்று சொல்லியதற்கு ஓர் சாட்சியாகின்றனர்.

இனி நாடகமாடுவோர், மேலேசொல்லிய சாஸ்திரிகள், பாகவதர்களைப்போலல்லாமல், தாங்களாடப்புகுந்த ஒவ்வொரு நாடகங்களிலும், கதைகளில் சந்தர்ப்பத்திற்கிணங்க நவரஸாலங்காரமான கானங்களையும், விருத்தங்களையும் உபந்யஸிப்பதோடு அந்தந்த சரித்திரங்கள் தச்சமயத்தில் பிரத்தியக்ஷமாய் எதிரில் நடப்பதுபோலவே வேஷத்தாலும், அபிநய நடனத்தாலும் காண்பிப்பார்கள். இவர்களுள்ளும் அநேகர் பக்திக்குகாரணமான பகவத் சரித்திரங்களையும், அடியார்களின் கதைகளையும், தர்மசாஸ்திர விதிகட்கு தாரணமாய் எவ்விதமான இடுக்கண்களிலும் தமது நன்னடக்கையினின்றும் தவறுமலிருந்த அரசர் முதலியோர் சரித்திரங்களையும் ஆடி, வேடிக்கை பார்க்கவருகின்ற புருஷர்கள் பக்தி, சத்தியம், பொறுமை அடக்கமுதலிய நற்குணங்களையும், ஸ்திரீகள் மேற்சொல்லிய குணங்களோடு பதிவிருதாதர்மத்தையுமுணர்ந்து அதனைலெய்து மேன்மையை யடையப்பெறுவண்ணம் அநேகவிதமான சிங்காரப்பாடல்களைப்பாடி நடித்து, நாடகத்திலுள்ள நீதி முதலிய குணங்கடோன்றுதபடி யுருக்குலையச்செய்து உலகத்தில் வியபசாரத்தை விருத்திபண்ணி வருகின்றார்கள். இத்தகைய நாடகங்களை பார்ப்பதில் விடர்களாகிய புருடர்கட்கும், வியபசாரிகளாகிய ஸ்திரீகட்குந்தான் கொண்டாட்டமேயொழிய, உத்தமபுருஷர்கள் உத்தம ஸ்திரீகள் இவர்கட்கு கௌரவக்குறைவு உண்டாகின்றது. அதிலும் ஸ்திரீகள் வேஷம்போட்டுக் கொண்டாடுவதாயிருந்தால் அந்நாடகத்தில் சாதுக்கள் ஒருவராயினுங்காணப்படார்கள்.

நாடக கிரந்தங்களியற்றியவர்களில் காளிதாஸர், ஷேக்ஸ்பியர் இவ்விருவர்களே புத்திமான்களாற் புகழப்பெற்று சிறப்பெய்தினாற்போல, நாடகமாடுவதில் நாடக லக்ஷணத்தின்படி நடித்தெல்லா ராஜாக்களாலும், பிரபுக்களாலும் நன்குசம்மானிக்கப்பெற்று கியாதியடைந்திருப்பவர் கும்பகோணம் ஸி. எஸ். கல்யாணராமய்யர் அவர்கள் ஒருவரே! அல்லாமலும காலேஜ் மாணுக்கர்களாலும் கவிகளின் இருதயத்தின்படி நாடக ரஸங்களை வெளிப்படுத்தி சிறப்பாய் நடித்துக்காட்டப்படுகின்றது.

யாமிதுகாறும் கதாப்பிரசங்கத்தைப் பற்றிச்சொல்லப் புகுந்ததின் கருத்தென்னையெனின்,

"புண்ணியமாம் பாவம் போம்போன நாட்செய்தவவை
மண்ணிற்பிறந்தார்க்கு வைத்தபொருளெண்ணுங்கா
லீதொழிய வேறில்லை யெச்சமைபத்தோர் சொல்லுந்
தீதொழிய நன்மைசெயல்."

என்றருளிச்செய்த மூதாட்டியின் கருத்துக்கிணங்க, யாவருஞ்சன்மார்க்கத்தையே போதிக்கவேண்டுமென்றும், அத்தகைய சன்மார்க்கத்தை யாவருமுணர்ந்து அதில் நடக்கப்பயின்று வரல்வேண்டுமென்பது குறித்தேயாம்.

சுபாஷணி.

II

தமையனும் தங்கையும்.

அங்ஙனஞ்சென்ற பிரியதரிசனனைக்காண்டலுங் கன்னியாமாடத்திலிருந்த சுபாஷணி, 'அண்ணு! வருக, இப்பீடத்தில் வீற்றிரு; நேற்றேன் வந்திலை? எங்ஙனஞ் சென்றிருந்தனை?' என, பிரியதரிசனன், 'என்னன்புக்குரிய தங்காய்! உனக்கோ மணப்பருவஞ் சமீபித்திருக்கின்றது; நீ ஒருநாயகனை மணந்துகொண்டதின்பின் உன்னகரஞ்சென்று விடுவாயாகலின், அன்னுளில் உன்னை எவ்வண்ணம் பிரிந்திருப்பேன்! அப்பிரிவால் நேரிடுந்துன்பத்தைச்சகிக்கப்பழகுதற்பொருட்டே யெனதுயிர்த்தோழர்களுடனிள வேட்டமாடுவான் கான்புக்கிருந்தனன்;' என்றான்.

சுபாஷணி: 'ஆனுல் நீ அவ்வாறு பழக்கம் பண்ணிக்கொள்வதால் சகித்திருந்தாலும், நான்நமது தாய்தந்தையரையுமுன்னையும் பிரிந்தெவ்வண்ணமாற்றுவேன்.'

பிரியதரிசனன்; 'நங்காய்! நீகற்பிலக்கணநூலில் மிக்க வாராய்ச்சியுடையையாதலின், நினது கொழுநனுக்கு இயன்ற பணிவிடைபுரிந்தும், ஒழிந்தவேளைகளில் அறநூலாராய்ச்சியில் நினக்கு எனையபொழுதும் போகுமாகையால், எங்கள் ஞாபகம் வருவதற்கு நியாயமில்லையே!'

சுபாஷிணி: 'அண்ணா! நன்றுசொன்னாய்; என்னைப்பரிகசிக்கின்றனைபோலும்; இஃதிருக்கட்டும்: உபாத்தியாயரிடத்தில் இப்பொழுது யாதுநூல் கற்றுவருகின்றனை?'

பிரியதரிசனன்: 'அம்மா! யான் யானையேற்றங்குதிரையேற்றம் அஸ்திரப்பயிற்சி மல்யுத்தமுதலிய கலைகளிற் றேற்சியடைந்து இப்பொழுது தர்மசாஸ்திரத்தில் வியாவஹாரகாண்டத்தைப் பயிற்சிசெய்து வருகின்றேன்.

சுபாஷிணி: 'அற்றேல், ஸ்திரீகளெவ்வண்ணம் ஒழுகவேண்டுமென வந்நூலிற் கூறப்பட்டிருக்கின்றது.'

பிரியதரிசனன்: 'அம்மா! உங்கள்பாடு சவுக்கியந்தான்; பாலியத்தில் பிதாவுக்கும், யௌவனத்தில் கொழுநனுக்கும, வயோதிகத்தில்புத்திரனுக்குங் கீழ்ப்படிந்து நடந்து எப்பொழுதும் சுவதந்திரஹீனர்களாய் அன்னோர் பரிபாலனத்திலிருக்கவேண்டுமென்று கூறுவதனால்—.'

சுபாஷிணி: 'அப்படியா, அண்ணா! யான் படித்த நீதிநூலிலும் அவ்வண்ணமே கூறப்பட்டுளது. அதனால்தான் பெண்ஜந்மமிகுந்த பாபஜந்மமென்று உலகினரிகழ்ந்து கூறுகின்றார்கள். எப்பொழுதும் பிறருடைய அபிப்பிராயத்தின்படி நடத்தற்கு யாவரால் தான்முடியும்? இவ்வண்ணங்கூறிய தருமநூலார் ஆண்மகனாதலால் ஆண்பாலர்க்குச்சார்பாகக் கூறுகின்றார். ஆதலால் அவரை பக்ஷபாதமுடையாரென நினைக்கிறேன்.'

பிரியதரிசனன்: 'நன்று கூறினாய்; பெரியோர்கள் அறநூலை யேற்படுத்தியதெதற்கெனின், மக்கட்பிறப்பினையுடையார் மனம்போனவழிச்சென்று பாவத்தையார்ஜிக்காமல் சுகிருதத்தைச்செய்தற்கன்றோ?'

சுபாஷிணி: 'அற்றன்று: ஸ்திரீபுருஷர்களிருவருக்கும் சமான தருமத்தைக்கூறாமல் ஏற்றத்தாழ்வாகக்கூறிய அந்நூலார் நடுவு நிலைமையில்லாதவரெனவன்றோ கூறினேன்; மனிதர்கட்கு அறநூல் வேண்டியதில்லை என்று நான் கூறவில்லையே, நான் கேட்ட கேள்விக்கு இயன்றவிடை தராமல் எதனையோ உளறுகின்றனையே, உனக்கு ஞாபகமெங்கோயோ போகின்றது போலும்.'

பிரியதரிசனன்: 'அப்படியா, அம்மா! நீ கேட்டது எனக்கு நன்றாய் விளங்கவில்லை; அதனால்தான் வேறபிப்பிராயமாய்க்கொண்டு கூறினேன்; ஸ்திரீகள் இவ்வாறுகுதர்க்கம் பண்ணினால் சூத்திரர்களுமுயர்ந்த வருணத்தாருக்கு ஏவற்றொழில் செய்யவேண்டுமென அறநூலார் கூறியிருப்பதற்கு மாறுகொண்டு அன்னோரும் அவ்வறநூலாரை நடுவு நிலைமையில்லாதவரெனக் கூற முந்துவதன்றோ!'

சுபாஷிணி: 'ஆம்! அதனாலும் பக்ஷபாதமுடையாரென்பது எனக்குமபிப்பிராயந்தான்.'

பிரியதரிசனன்: 'அம்மா தங்காய்! உன்மடமைவாய்ந்த சொற்களைக்கேட்டதினால் எனக்கு நகைப்பு வருகின்றது; அதனால் உனக்கு பிரத்யுத்தரஞ்சொல்லக்கூடவில்லை. பெண்களுக்குரிய நற்குணங்களுள் மடம் என்னுங்குணத்தை இரண்டாவதாக வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் பெண்கள் எவ்வளவு கல்வித்திறமையுடையவராகவிருப்பினும் அவ்வறியாமைக்குணத்தான் மக்னப்படுகின்றார்கள்.'

சுபாஷணி: 'நான் கேட்டதற்கியன்ற விடையளிக்காமல், பெண்களை அறியாமைக்குணமுடையார் என நிஷித்தமாகக் கூறுகின்ற உனது வாசகத்தைக்கேட்டு எனக்குநகைப்பு வருகின்றது. பெண்களும் சூத்திரர்களும் நீதிநூற்கள் எழுதியிருப்பார்களாயின், அப்பொழுது ஆண்பாலாரும் உயர்ந்தஜாதியாரெனப்படுவோரும் படும்பாடுதெரியும். அவர்களெழுதின், இவ்வறநுலாறைப்போலத்தங்கட்குச்சார்பாகத்தானே எழுதப்புகுவார்கள்.'

பிரியதரிசனன்: 'நீ கூறியதுண்மையே. சூத்திரர்களும் ஸ்திரீகளும் பருவத்தாற்றாழ்ந்தவர்களாதலால் அவர்கள் நீதிநூல் எழுதப்புகின், அநீதியாய் உசிதானுசிதந்தெரியாமல் எழுதப்புகுவார்கள். அதனால் உயர்ந்த வருணத்தாரும் ஆண்பாலாரும் கஷ்டமடையவேண்டியதுதான். பெண்பாலார் ஸ்மிருதி எழுதாமலிருக்கின்ற இக்காலத்திலேயே, அன்னோர் பால் ஆண்பாலார் அகப்பட்டுக்கொண்டு படும் கஷ்டத்திற்களவில்லை. இன்னுமவர்கள் நீதிநூலுமெழுதிவிட்டால் ஆண்பாலார் குரங்குகளும், பெண்பாலார் குரங்காட்டிகளுமாக ஆகவேண்டியதுதான்.'

சுபாஷணி: 'நான் கேட்டதற்கு பரிஷ்காரமாய் நீ விடைகூறவில்லையாயினும், உன்னுடைய வாசகத்திலிருந்தே, அதற்கும் பதில் தெரிந்து கொண்டேன். அஃதென்னையெனின், ஸ்திரீகளும் சூத்திரர்களும் பரிவாகத் தாழ்வுடையவர்களென்றும், ஆண்பாலாரும் உயர்ந்த ஜாதியினரும் பரிபாகமுதிர்ச்சியுள்ளாரென்றும், அப்பரிபாக முதிர்ச்சியினையுடைய ஆண்பாலாரும் உயர்ந்த ஜாதியினரும் அறநூலெழுதுதற்த அருகமானவர்களென்றும், அவர்களெழுதிய அந்நூலின்படியே பரிபாகத் தாழ்வினையுடைய மற்ற ஜாதியார்களும் ஸ்திரீகளும் ஒழுகி வரல்வேண்டுமென்று நீ கூறுவதாய் எனக்குத்தோன்றுகின்றது.'

பிரியதரிசனன்: 'ஆம்! ஆம்!! அதுதான் நான் சொல்லவந்தேன். நான் சொல்லப்புகுவதற்குமுன் நீயேயெடுத்துச்சொல்லிவிட்டனை.'

சுபாஷணி: 'நன்று கூறினை! நீ சொல்வது அறிவுடையோரால் அங்கீகரிக்கத்தக்கதன்று. பெண்பாலாராகிய ஔவையாரும், சூத்திரராய் அவதரித்தவறிவுடையார் பலரும் செய்திருக்கின்ற நீதிநூல்களை உலகமங்கீகரிக்கவில்லையா? அதனால் உயர்ந்தஜாதி இழிந்தஜாதி என்பதும், ஆண்பால்பெண்பாலென்பதும்தருமநூலெழுதுவதற்குக்காரணமன்று. அறிவுடைமையே காரணமாம். ஆதலால், அறிவுடையோர் எந்தச்சாதினர் எந்தப்பாலினராயினும் தருமநூலெழுதுவதற்கு அருகமுள்ளவரே. இதுபற்றியன்றே,

> "ஆக்குமறிவானலது பிறப்பினால்
> மீக்கொளுயர் விழிவுவேண்டற்க—நீக்கு
> பவராரரவின் பருமணிகண்டென்றுங்
> கவரார்கடலின் கடு."

> "ஜாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா
> னீதிவழுவா நெறிமுறையின்—மேதினியி
> லிட்டாற் பெரியோரிடாதாரிழிகுலத்தோர்
> பட்டாங்கிலுள்ளபடி."

"தாமரை பொன்முத்துச் சவரங் கோரோசனைபால்
பூமருதேன் பட்டுப்புனுகுசவாதாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்க
ளெங்கே பிறந்தாலு மென்;"

என்று பெரியார் கூறியிருக்கின்றனர்.'

பிரியதரிசனன்: 'இச்செய்யுட்களை பெண்பாலாரும் சூத்திரர்களுமியற்றியுள்ளாராகையலது பிரமாணமாகாது. உலகத்தில் உயர்ந்த ஜாதியினர் அறிவிற்குறைந்தவராயிருப்பினும், கீழ்குலத்திற் பிறந்த அறிவுடையாரும், அன்னோரை வந்தனஞ்செய்து அவர்பால் ஆசிபெற்று உய்வது பிரத்தியக்ஷமாதலால், ஜாதி உயர்வு தாழ்வையுங்கொள்ளவேண்டியது தான்.'

சுபாஷணி: 'அண்ணா! நீ மிகவும் விநோதமாகவே பேசுகின்றனை. பெண்பாலாரும் சூத்திரரும் சொல்லிய நீதிநூல் பிரமாணமாகாதெனின், ஆண்பாலாருமுயர்ந்த ஜாதியினருமாவார், தம்மைப்பூஷித்துச் சொல்லிய நூல்கள் எங்ஙனம் பிரமாணமாகும்? உயர்ந்த ஜாதியில் அறிவிலாதாரை. இழிந்த ஜாதியில் அறிவுடையார் வணங்குவது என்னையெனின், சேதனனாகிய ஒருமனுஷியன். அசேதனமாகிய சிலாதி விக்கிரகங்களில் தேவதைகளை ஆவாகனம்பண்ணி வணங்குவதுபோல், அவர்பாலும் யதாவத்தாகவுள்ள அந்தணர்களுடைய (அறிவுடையார்) இலக்கணங்கள் உருவத்தில் காணப்படுகையால், அவ்வந்தணத்தன்மைக்கு வந்தனஞ்செய்து நன்மையுறுகின்றார்கள். அவ்வண்ணஞ்செய்வது அவர்களறிவுடமைக்குத்தக்கதே; எதுபோலுமெனில், சேதனர்கள் அசேதனத்தில் தெய்வபாவனைபண்ணி வணங்குவதுபோல்—;இதனால் ஜாதியினாலுயர்வுசித்தித்தலின்று. அறிவினால்தான்.—'

பிரியதரிசனன்: 'நங்காய்! வருணத்தைப்பற்றிய சங்கதியிருக்கட்டும்: உன்னிஷ்டம்போல் அறிவுடைமையை முக்கியமாகக்கொண்டாலும் தருமசாஸ்திரமெழுதினவர், அறிவுடமையிற் சிறந்தவராகையால், வருணாசிரம தருமங்களும், ஆண்பாலார் பெண்பாலாருக்குரிய விதிகளும் ஒழிந்த தருமங்களையும், தமது நுண்ணறிவினாலறிந்து கூறியிருக்கின்றனர். ஸ்திரீகளிலும் சூத்திரர்களிலும், நுசியான்மை அறிவுடையோரிருப்பினும், அவர்கள் தங்கள் அறிவுடமையினாலேயே மேன்மை பெறுகின்றார்கள். பெரும்பாலும் மூடர்களே அன்னோர்களிலிருப்பதால், அவர்கள் கீழ்ப்படிந்து நடக்குமாறு கூறியிருக்கின்றனர். அதனால் அவர் பக்ஷபாதமுடையவராவரோ?'

சுபாஷணி: 'அண்ணா! இந்த வழவழப்பு சமாதானத்தை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நீதிசாஸ்திரமெழுதப்புகுவார் எல்லாரிடத்தும் சமபக்ஷமான ஜீவகாருண்யமுடையவராயிருந்து, அவரவர் அறிவுகுணதாரதம்மியத்திற்கேற்ப விதிகூறாமல் சிலர்க்குச்சார்பாகவும், சிலர்க்கு நிர்பந்தமாகவும் கூறியுள்ளாராதலால், அவர் நடுவு நிலைமை இல்லாதவரே.'

பிரியதரிசனன்: 'ஸ்திரீ சூத்திரர்கட்குக்கூறியவற்றை மாத்திர நீ நிற்பந்தமானவிதி என்று சொன்னால், ஏனையோர்க்குக்கூறிய விதிகள்தாமென்னை? நிற்பந்தமல்லவா? அவர்களும் நீதிநூலார் அபிப்பிராயப்படித்தானே நடக்கவேண்டியிருக்கிறது?'

சுபாஷணி: ‘அற்றன்று. ஸ்திரீ சூத்திரர்களை நடத்துபவர்கள் ஆண்பாலாருமுயர்ந்த வருணத்தாருமாதலால், அவர்களெப்பொழுதுஞ் சமீபத்திலிருந்தேயவர்களிடம் வேலைவாங்கிவிடுவார்கள்; ஸ்மிருதிக்காரர்கள் அபிப்பிராயப்படி நடக்க வேண்டியவர்களிடத்தில், அறநூலார் அருகிலிருந்து வேலைவாங்காமல் எட்டிலெழுதிவைத்துவிட்டுப்போயினமையால். அதனைமேற்கொள்ளாமல் சுவயேச்சையாய்த் திரிபவர்கட்கு நிற்பந்தமெங்ஙனமுளது?’

பிரியதரிசனன்: ‘சமீபத்திலிருந்தாற்றானென்னை? மீறிநடப்பவர்கட்கு.–’

சுபாஷணி: ‘மீறி நடப்பவர்களை சுவயேச்சையாய் விட்டுவிடுவதும், மீறி நடக்க சக்தியற்றவர்களை அவமதிப்பினாலூழியம் பண்ணச்செய்வதுந்துற்புத்தியுடையாரது செய்கையென விளங்குகிறது. அதைக்குறித்து ஒருபமானஞ் சொல்லுகிறேன் கேள்: மிருகங்களில் சாதுமிருகமென்றும், துஷ்டமிருகமென்றும் இருவகையுண்டு; அவற்றுள் மனிதனை ஜயிக்கத்தக்க அறிவற்ற சாதுமிருகங்களை வாகனமுதலியவைகளாக அவமதிப்பினாலுபயோகித்துக்கொண்டும், துஷ்டமிருகங்களைக்காணும்பொழுது அதற்கெதிரில் தங்கள் ரூபத்தைக்காட்டாமல் அவைகட்கு மரியாதை தந்து ஒளித்துக்கொள்ளுகின்றார்கள். அது போலவே ஸதிரீசூத்திரர்களில் சாதுவாயிருப்பவர்களை யவமதிப்பினால் ஊழியக்காறர்களாயேற்றுக்கொண்டும், அவ்வண்ணமூழியஞ்செய்தற்குப் பொறுந்தாதவரை வாயினால் மாத்திரமிலேச்சரென யிகழ்ந்துவிட்டு அவர்களைக்காணும்பொழுது சமமரியாதை தந்து உபசரிக்கின்றார்கள். இப்படிச்செய்வது ‘உதைப்பானுக்கு வெளுப்பான் ஜாதிவண்ணான்’ என்னும் பழமொழிப்போலிருக்கிறது.’

பிரியதரிசனன்: ‘முற்காலத்திலிந்நாட்டில் மிலேச்சர்கள்பால் இராஜ்யமிருந்தமையால், அவரிடத்து அக்காலத்தில் செய்து வந்த மரியாதை இன்றும் நடந்து வருகிறது. அவ்வழக்கத்தையிப்போது மாற்றுவதற்கு எப்படி முடியும்?’

சுபாஷணி: ‘அவ்வண்ணமாகவே சூத்திரர்களிலும் ஸதிரீகளிலும் புத்திமான்களாயிருந்த அறுபத்திமூவர்களிற் சிலரையும், ஆழ்வாராசாரிகளிற் சிலரையுஞ் சிவாலய விஷ்ணுவாலயங்களில் விக்ரஹ ரூபமாய் ஸதாபிக்கப்பட்டு எல்லா வருணத்தாராலும் அவர்கட்கு உச்சவ முதலியவற்றைச்செய்து வணங்கப்பட்டு வருகின்றது. காரைக்காலம்மையாரை அவரது நாயகன் வணங்கினமையும், கூன்பாண்டியன் தன் மனைவி மங்கையர்க்கரசியாரை தனக்காசிரியஸ்தானமாக மகிமைபாராட்டியது முலகினர் அங்கீகாரஞ்செய்கின்றனர். துலுக்க நாச்சியாரையும் ஜாதியினால் மிலேச்சத்துவமுடையாளென்று கொள்ளாமல் உலகினர் வணங்குகின்றார்களே!’

பிரியதரிசனன்: ‘தங்காய்! இப்பொழுது நீ சொல்லியது யுக்தமான வாசகமன்று; ஏனெனின், மேலேயுன்னாலெடுத்துச்சொல்லப்பட்டவர்கள் கடவுளால் பக்தர்களாகக்கொள்ளப்பட்டமையால் உலகினரு மேன்மைபாராட்டி வருகின்றார்கள் ஆதலால்.’—

சுபாஷணி: ‘கடவுள், ஸதிரீசூத்திரர்களில் பக்திமான்களை என்னாலங்கீகரிக்கப்பட்டாலொழிய உயர்ந்தோர் அங்கீகரித்தல் கூடாது என்றெங்கேயாயினுங்கூறியிருக்கின்றாரா? பட்டினத்தார், பத்திரகிரியார், தாயுமானவர் முதலினோர் புராண

பிரசித்தியில்லாதவர்களாயினும் யாவரிகழ்ந்துதள்ளினர்கள்? அன்றியும், விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாகிய இராமகிருஷ்ணுதி க்ஷத்திரிய விக்கரகங்களை அந்தணர்கள் வழிபடுமாறென்னே? அவர்கள் ஜன்மத்தைப்பற்றியிழிவாக நினையாமல் விஷ்ணுவின் அம்சமாகிய குணத்தைப்பற்றியெனின், அவ்வாறு எல்லாரிடத்தும் பிறப்பை நோக்காமல் குணத்தினல் உயர்வுதாழ்வுகளை வன் கொள்ளக்கூடாது? புராணங்களில் வஸிஷ்டர், வால்மீகி, விசுவாமித்திரர் முதலிய மகரிஷிகளையும், தசரதரையும் அவர்மனைவிமார் மூவரையும் ஸ்ரீராமரும்; கிருஷ்ணர் முதலினேரும் அவ்வாறே ரிஷிகள் முதலிய பெரியோர்களை வந்தனஞ்செய்து வழிபட்டதாகவுங் கூறப்படுகின்றது. அவ்வண்ணமிருக்க, இக்காலத்தில் அந்தணர்கள் அம்முனிவர்களின் சந்ததியார்களாயிருந்தும், அம்முநிவர்கட்கு சேவகர்களாகிய இராமகிருஷ்ணுதிகளை சேவ்யர்களாகக்கொண்டது தம்முன்னேர்கட்கு சிடர்களாயிருந்தமைபற்றியோ, அல்லது நீதி சாஸ்திரத்தில்,

दैवाधीनं जगत्सर्वं मंत्राधीनं तथैवच ।
तन्मन्त्रं ब्राह्मणाधीनं ब्राह्मणोममदेवता ॥

"தெய்வாதீ நம்ஜகத் ஸர்வம்மந்தராதீனம் ததைவச
தன்மந்த்ரம்ப்ராம்ஹணுதீ நம்ப்ராம்ஹணுமமதேவதா."

என்று கண்ணன் கூறியிருக்கின்றதற்குப் பதிலாகத் தாங்களுமவரை தெய்வமாகமதிமை பாராட்டுதற்கோ? அறிகிலேன்!'

பிரியதரிசனன்: 'ஜாதியினுலுயர்வு தாழ்வுகளேற்பட்டு வருவதை அந்தணர் முதலிய பெரியோர்கள் இக்காலத்தில் புதிதாக உண்டுபண்ணவில்லை. தொன்றுதொட்டே வழங்கிவருவதால் அதனைமாற்றுதற்கெங்ஙனங் கூடும்? ஸமிருதிக்காரர் அனுஷ்டானத்தில் அவ்வாறு கொண்டுவந்திருப்பதால்.—'

டி. பி. விசுவனுதபிள்ளை.

இன்னும் வரும்.

CHAMELION.

(A true translation from an English Poem)

பச்சோந்தி.

1. வழிசரித்திடுமான் வரிருவருண்மருவிப்
பொர்ழியுநட்பொடு மாடினருரை பலபுகன்று
பழுதிலன்ன வருரையினிலோங்கி யின்படிவ
மெழுதுபான்மையா மிவற்றினைப்பேசுதற்கெழுந்தார்.

2. அன்னபோதினிலொருவனீ துரைத்தனனிலகு
ழிந்நிலத்து விநோதத்திற் சிறந்ததொன்றில்லைப்
பன்னுமோங்கியிற் றிண்ணமேயதனுடல் பார்க்கிற்
றுன்னுபல்லியினிளைத்து நீண்டது வெனத்தோன்றும்.

3. தலையுநாவுமேகயலையும் பாம்பையுந்தகையு
மலையுங்கால் பிரிந்துள வுகிர்மூன்றெடுமோகு
முலைவிலாது நீண்டொளிருவாலதிபினே வோங்கு
மெலநகர்ந்திடு மிகுதியு நோக்குனர் வியப்ப.

4. அன்றியும் மதனிறமெனில் யாவரேயதுபோற்
றுன்று நீலங்காண்பவரென வுறுதியிற்சொலவு
நன்று நன்று நீ நிறுத்தென மற்றவனகையா
வென்று மன்னது பசுமையேயென வெதிரியம்பும்.

5. சற்றுமுன்னர் யானிவ்விருவிழி கொடுஞ்சார்ந்தே
யுற்று நோக்கலும் வெயிலிடைத்திறந்த வாயோடு
முற்றுநீண்டுடல் காய்ந்திடக்கிடந்தது முனிபோ
லெற்று வாயுவை யுணவென வருந்தியதென்றான்.

வேறு.

6. என்றவனுரைப்ப முன்னோனியம்புவான் கேட்டியைய!
நின்றனைப்போலயானு நேர்ந்துளே னதனைலோர்ந்தி
துன்றிய நீலமென்றே சொல்லுவன் குளிர்ந்த நீழல்
சென்றுட நீட்டியுற்ற செவ்வியிற் பெரிதுங்கண்டேன்.

வேறு.

7. பச்சை பச்சையாகுமன்றி நீலமென்றுபன்னுத
லிச்சையின்படிப்பிதற்றலாகு மென்றியம்பினு
னுச்சமாய கோபமோடுருத்துரைப்பன் மற்றவன்.
பச்சையே கொலம்பகங்கள் போயவென்று பார்த்தியோ.

8. அம்பகஞ்கள் போயவேனுமஃதொர் நஷ்டமன்றுகா
ணெம்பிகண் களிந்த வண்ணநிற்கிருக்கிலென்பயன்?
பம்பிவாசகங்கணின்று பாணிமட்டு முற்றதால்
வம்பு முற்றியன்ன சண்டை வரவரக்கறுத்ததே.

வேறு.

9. அன்னகாலையிலவ்வழி நல்வினை
துன்னலாலொருவன் வந்து தோன்றினன்;
இன்னசெய்தியவன் செவியேற்றியே
பன்னுமோந்தி பசுமை கொல்நீலமோ?

10. என்றிரந்தவர் தங்கட்கியம்புவான்
றுன்றுவாத மொழிகடூறப்பிரா
லன்றுபச்சையு நீலமுமஃதுதா
னென்று காரிகளங்கனியென்னவே.

11. நேற்றிராவிற் பிடித்ததை நீளொளி
பூற்றுவத்தி யெதிருற நோக்கலு
மாற்றருங் கருப்பாகி வயங்கிற்றுற்
றேற்றமீதறிவீர் தெளிவீர்களே.

வேறு.

12. இம்மொழியவன்சொல இருதிறத்தருந்
தெம்முனைவாரெனவிழி செலுத்தவு
நும்முனங்காட்டுவோனெக்கியையுற
வம்மநீங்குதிரென வறைந்திட்டானரோ!

13. என்றலுமவர்களுளொருவனீதுதா
னன்றது நீலமேயுயிருநல்குவேன்
அன்றெனமற்றவனதனைப்பார்த்தபின்
துன்றிய பச்சையாவுரைப்பிர் சொல்லினேன்.

14. இவ்வுரைகூறலு மெதிர்ந்த மற்றவன்
செவ்விது நீஙகளேயத்திற்றீரவே
இவ்விடத்தோர்ந்தி காட்டிடுவல்கண்டபின்
அவ்விதங்கரியன்றே லருந்துவேனதை.

வேறு.

15. வஞ்சினமுரைத்தவனு மற்றவர்கண்முன்னே
விஞ்சுமெழிலோர்ந்திதரை விட்டனன் வியப்பே
பஞ்செனவெளுத்த வுடல் கண்டனர் பயந்தா
ரஞ்சியெதிர் நின்றவனு மாச்சரிய முற்றான்.

16. ஒந்திகூறுமாலன்றுதான் முதன்முதலுரைக்கும்
போந்தமைந்தர்காண் மூவருமுள்ளதே புகன்றீர்
சேர்ந்து மூவருந்தவறினிராயினுஞ் சிறியே
னைந்துரைப்பன கேட்டு நும்மகத்திடையறிவீர்.

17. கண்ட நீரினியுரைப்பிரேல் கருதிதிற்பெரிது
முண்டுநோக்குன ரேனையரும் மெனவுணர்வீர்
கண்டயாவருமவரவர் கண்களே சிறப்பாய்க்
கொண்டுளா ரெனிலதன் பொருட்டதிசயங்கொள்ளீர்.

டி. ஏ. சுவாமிநாதய்யர் பி. ஏ.

A MORAL STORY.

"எளியாரை வலியாரடித்தால் வலியாரை தெய்வமடிக்கும்," எனவும், "முடவனை மூர்க்கன் கொன்றால் மூர்க்கனை முனிதான்கொல்லும்," எனவும் பெரியோர்கள் கூறுவதற்கியன்ற ஓர் சிறு கதை.

ஓர் வைதீகபிராமணன், தன் குடும்பத்தில், தாய் தந்தை தமையன் தம்பி முதலிய உறவினர்களின்றி தனியே தன்மனதிற்கிசைந்தவளும், "குலமகட்குத்தெய்வங் கொழுநனே," என்னுமுதுரையைச் சிந்தித்து, இல்லறத்தை நடத்திவருபவளுமாகிய மனைவியுடன் இன்புற்றுக்காலங்கழிக்குநாட்களில் ஒருநாள், அதிசாரநோயினால் பிரஜ்ஞையுடன் திடீரெனத் தனக்கு வரப்போகின்ற மரணசம்பவத்தையறிந்து, தன்னன்புக்குரிய பர்த்தாவுடன், "எனக்கும்மைவிட்டுப்பிரியுங்காலநேரிட்டதே," என்றிரக்கத்துடன் கனிந்த மொழிகளால் பேசினபடியே அவன் மனைவி உயிர்துறந்தனள்.

பின்னர், அவ்வேழையந்தணன் தன்னில்லாளது நற்குணநற்செய்கைகளைப்பல்காலுநினைந்து வருந்தி, மனைவிக்குச்செய்யவேண்டிய கிரியைகளை முடித்து "பொற்றாலியோடெவையும்போம்," என்றவ்வையார் கூறியிருத்தலால், இரண்டாவது மணம்புரியக்கருதி, நாமக்கல்லில் சுப்புஜடாவல்லவருக்கோர் பெண்ணிருப்பதையுணர்ந்து, தனக்கு பாணிக்கிரஹணஞ்செய்து கொடுக்கும்படி கடிதமூலமாய்க் கேட்டுக்கொண்டனன்.

அக்கடிதம் வரப்பெற்ற ஜடாவல்லவர், மாயூரக்ஷேத்திரவாசியாகிய சுப்பரமணியசாஸ்திரிகள் இளமைப்பருவமும், கல்விக்கேள்விகளுடைமையும், நித்தியகர்மானுஷ்டானங்களிற்றவறாமையும், யாவரு நன்குமதித்தலுமுடையவராயும், பூர்வ சம்மந்தியாயுமிருப்பதால், தன்னொரே பெண்ணான கௌரியம்மாளை, அவ்வந்தணருக்கு விவாகஞ்செய்துகொடுக்க மனமிசைந்து தமது கிரஹத்திலேயே மாப்பிள்ளை வசிக்கவேண்டுமென்னுங் கருத்தையறிவிக்க, உடனே அவ்விப்பிரசிரேஷ்டராகிய சுப்பரமணியசாஸ்திரிகள், தன் மூத்த மனைவியின் வஸ்திராபரணமுதலிய சொத்துக்கள் யாவற்றையும் கைக்கொண்டு நைஷ்டிகராயும் ஜீவகாருண்யமுடையவராயுமிருப்பவராதலால், இரயிலிலும், வண்டியிலும் ஏறிப்போகாமல், கால்நடையாகவே ரோட்டுமார்க்கமாய் மடிசஞ்சியைத்தலையில் வைத்துக்கொண்டு பிரயாணமாகிப்போகுங்காலையில், வழியிலெதிர்ப்படும் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணியும், திவ்வியக்ஷேத்திரங்களை தரிசித்துக்கொண்டுஞ் சென்று ஓர் நாள் விண்ணமங்கலமென்னுங் கிராமத்தருகில் வரும்போது அஸ்தமனசமயமாயும், அவ்வூர் கள்ளப்பந்தாயுமிருப்பதையுணர்ந்து தனது திரவியங்களைத்திருடர்களபகரிப்பார்களென்னும்பயத்தால் அந்தவூர் கிராம முன்சீப்தாரிடம் சொத்துக்களை ஒப்பு

வித்து, பொழுதுவிடிந்து புறப்பட்டுப்போகலாமென்னுமெண்ணங்கொண்டு அவன்வீட்டை நோக்கிச்சென்ருர்.

முன்சீப் சின்னியநாடான் வீட்டருகில் அவவந்தணர் வரும்பொழுது தலையில் சரிகைபோட்ட வெள்ளையுருமால் கட்டியும், அரையில் பட்டுக்கறையுமுந்திக்கண்டையும்போட்ட வெள்ளைவேஷ்டியை தட்டாடையாகஉடுத்தியும, கட்டம்போட்ட சிகப்பு உருமால் போர்த்தியும், கிருதாமீசையுடன் கன்னங்கரேலென்று யமதர்மராஜனைப்போல் ஒருவன்தோன்றினன். அவ்வாறு தோன்றியவன் முன்சீப் சின்னியநாடான்தான்என்பதைக்குறிப்பினுற்றெரிந்து அவனுக்காசீர்வாதஞ்சொல்ல, அவனுமஞ்சலிபண்ணி, "யாருடா உள்ளேயிருப்பவன், அய்யருக்குக்கட்டில் கொண்டுவந்துபோடு," எனலும் வெள்ளைவேஷ்டி அரையிலும, துவால்துண்டை தோளிலுமுடையவனய், ஸ்வர்னமயமானகாப்பும் கொலுசுமணிந்த கைகளுடன் நீருண்டமேகம்போன்ற கருத்த தேஹத்துடன் யமசகோதரனகிய சனீசுவரன்போல் ஒருவன் கட்டிலொன்றை எடுத்துக்கொண்டுவந்துபோட்டான்.

உடனே சின்னியநாடான், "சாமி! இந்தக்கட்டிலிலே குந்துங்க," என அவர், மடிசஞ்சியைக்கீழே இரக்கிவைத்து, "சம்போசங்கரமகாதேவா!" என்று உச்சரித்துக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்தார்.

அச்சின்னியநாடான், "சாமி! எந்த ஊருங்க நீங்க? இங்கே இன்னேரத்தில் எங்கே வந்திங்க?" என, அந்தணர், அவன் செய்யுமுபசாரம் வணக்கமுதலியவற்றைக்கண்டு யோக்கியனுகமதித்துச் சொல்லுகிருர். "அப்பன்! நானிருக்கிறதுமாயவரம், நாமக்சல்லுக்குப்போகிறேன்; பொழுதுபோயிற்று அநுஷ்டானஞ்செய்துகொண்டு, இராத்திரியுன்வீட்டிற்றங்கியிருந்து விடிந்தபின் புறப்பட்டுப்போகலாமென உத்தேசித்து உன்னிடம் வந்தேன்" என்ருர்.

சின்னியநாடான்: 'சாமி! உங்களுக்கென்னவேணுமோ சொல்லிடுங்க சாமி! அதெல்லா மிந்தநாய் செய்யக் காத்திருக்குது சாமிக என் வளவு வர என்னபுண்ணியம்பண்ணினேனே?'

சுப்பரமணியசாஸ்திரிகள்: 'அப்பா! (தன் மடிசஞ்சியை யவிழ்த்துக்கொண்டே) சுமார் ரூபாய் ஆயிரம்பெறும்படியான சொத்துக்களை, இராத்திரிக்குப் பத்திரமாய் வைத்திருந்து காலையில் என்னிடங்கொடுத்தால், உனக்கு நல்ல பலனுண்டு; இந்த உபகாரத்தை யெப்போதுமறவேன்.'

நாடான்: 'நீங்க எதுவேணுமானலும் குடுங்க, சாமி! பத்திரமாய் வச்சிருந்து கொடுக்கிறேன். இது உங்க வளவாகவே எண்ணுங்க சாமி!'

பின்பு, அந்தணர் நகைமுதலியவைகளை எண்ணி அவனிடமொப்புவித்துவிட்டு, 'அப்பா! நான் அநுஷ்டானஞ்செய்யப்போகவேண்டும்; கம்மாயிக்குப்போகும் வழி காண்பிவி" என்றார்.'

அந்நாடான், தன் மனைவியையழைத்து, "ஒரு மரக்காலைக் கொண்டு வா," எனலும், வேப்பெண்ணை தடவி சீவிய தலைமயிர்சொருக்கும், பூச்சிக்கூடு நாகபடம் தண்டட்டி என்னும கலன்களணிந்து இரண்டு தோள்வரையிலும் தொங்கியசைகின்ற காதுகளும், உடுத்தியிருக்கின்ற பட்டுக்கரைபோட்ட சிகப்புசந்தரகாளிப்புடவையும், வெள்ளிக்காப்பு தோள்வளை விரல்நிறைந்த மோதிரங்களும், கழுத்தில் பட்டக்காரையுமுடையவளாய், கண்களிரண்டும் கோழிமுட்டைப்பதித்ததுபோலதோன்றுமபடி பனங்காய்த்திருமேனியுடன்மரக்காலை எடுத்துக்கொண்டு அவள், அவனிடம் வந்தாள். அவன் அவளுடன், "இந்த நகையும் பணமும் அய்யாவுது, பத்திரமாய் வச்சிருந்து, காலமே அய்யா வந்து கேட்பாக கொடுத்துடு," என்று சொல்லி மரக்காலில்வைக்க, அவள் எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

பிறகு, நாடான், "அடா முருவ! இந்தய்யாவைக்கூட்டிப்போய் காத்தராயன்கமமாயண்டை விடு," என, அம்முருகன் எழுந்து வெளிச்சம்பிடித்துக் கொண்டு, அய்யருடன் சென்று குட்டையைக்காண்பிக்க, அதில் சந்தியாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தன் கையில் வைத்திருந்த பக்ஷணங்களைப்புசித்து நீருருந்திக்கொண்டிருந்தார்.

இதற்குமுன் சின்னிநாடான், பிராமணனுடைய சொத்துக்களையபகரிக்க எண்ணங்கொண்டு, பிராமணனை இன்றய இராத்திரிக்குள் வேலை முடித்துவிடவேண்டுமென்று யோசித்துக்கொண்டே குட்டையண்டையிற்சென்று முருகனைக்கூப்பிட்டு, "அய்யரை மாரியம்மன்கோவிலில் சௌக்யமாய்ப் படுத்துக்கொள்ளும்படி அழைத்துக்கொண்டுபோய் விட்டுவிட்டு வீட்டிற்குப் போ," வென்றுசொல்லி, அந்தணரைப்பார்த்து, "சாமி! இராத்திரிசாப்பாட்டுக்குச்சோறுசமைக்சிறீங்களா?" என, அவர், வேண்டாம்; என்கையிலிருந்த பலகாரத்தைத்தின்று பசியாறினேன், காலையில்பார்த்துக்கொள்ளலாம்" என்றார். "ஆனா சாமி! நீங்க முருவன்பின்னோடேபோய் மாரியம்மன்கோயிலில் சுகமாய்ப்படுத்துக்கொள்ளுங்க" என்றுசொல்லிவிட்டுத்தன்பண்ணையாட்களிருக்குமிடஞ்சென்று இருவரையழைத்து, இரகசியமாய், "மாரியம்மன்கோயிலில் படுத்திருக்கிறபேர்வழியை வேலைமுடித்துவிட்டுவாருங்க" என்றுக்கியாபித்துவிட்டு, நாடான் தன் வீடுபோய்ச்சேர்ந்தான்.

பின்பு முருகன், பிராமணனை மாரியம்மன்கோயிலுக்கழைத்துக்கொண்டுபோய்விட்டு, சாமி; எசமாங்க இங்கேபடுத்துக்கொள்ளுங்க, நான் வளவுக்குப்போறேன்க," என்று சொல்லிப்போய்விட்டான்.

பிராமணன் அக்கோயிலில், வேறொருவரும் துணையில்லாமல், ஒரு பக்கத்தில் மேல்வஸ்திரத்தால்பூமியை நன்றாயடித்துவிட்டு, வஸ்திரத்தை விரித்துப்போட்டு, மடிசஞ்சியை தலைக்குவைத்து சயனித்தார். உடனே பளிச்சு பளிச்சு என்று ஒருபக்கத்தில் கெளளிசொல்லிற்று. அவர் சகுன சாஸ்திரந்தெரிந்தவரானதால், கெளளியை யாராய்ந்து பார்க்கும்பொழுது அந்த இடத்தில் தனக்குக்கெடுதி வருவதாக அறிந்து தூக்கம் பிடியாமல், ஈசுவரத்தியானம் பண்ணிக்கொண்டு, புருஷ சூக்தம், ருத்திர, சமக, நமக சூக்தங்களை ஓராவர்த்தி பாராயணம் பண்ணிவிட்டு, உழுவலன்போடு, சிவாநந்தல ஹரிஸ்தோத்திரத்தைச்சொல்லிக்கொண்டு ஆனந்தப்பரவசராயிருக்கையில், ஓர் சூத்திரச்சந்நியாசி அக்கோயிலுக்குள்ளிருந்து அந்தணரிடம் வந்து, உரத்தகுரலுடன், "ஆரடா பார்ப்பான், கூச்சல்போடுகிறாய்! எனக்குத்தூக்கம் பிடிக்கவில்லை, இந்தயிடத்தைவிட்டு எழுந்திருந்துபோ," என்று துரத்தினான். உடனே பிராமணர் பயந்தவராகையால், "நாம் சயனிக்கும்போது இந்தக்கோயிலில் ஒருவருமில்லையே, இப்போது நடு நிசியில் உள்ளிருந்து வந்த ஒருவன் நம்மை வெரட்டுகிறானே, என்ன கஷ்டம் நமக்கிப்போது சம்பவித்தது? ஈசுவரா!" என்று சொல்லிக்கொண்டு ஐந்தாறு வீட்டிற்கப்புறம்போய் ஓர் திண்ணையில் படுத்துக்கொண்டார். சூத்திரச்சந்நியாசியாக வந்த ஈசுவரர், தன்னை பிரார்த்தனை செய்து கொண்டிருந்த அந்தணனை வேறிடத்திற்கனுப்பிவிட்டு மறைந்தருளினார்.

இங்ஙனமிப்படியிருக்க, முன்சீப் மகன், அடுத்த கிராமத்தில் நாடகம் பார்த்துவிட்டுத்தன் சிநேகிதர்களுடன் திரும்பி வந்து, கூடவந்தவர்களவர்களில்லஞ்சென்றபின், தன்னில்லம்போய்ப்படுத்தால் தன் தகப்பன் இதுவரையிலெங்கே போயினாயென்று கோபிப்பன் எனககருதி, மாரியம்மன் கோவிலில் சுவஸ்தமாய்ப்படுத்துறங்கினான்.

மணிய காரனாலனுப்பிய கொலைபாதகளிருவரும் யமகிங்கரர்களைப்போல் வந்து படுத்துறங்கினவனைக்கத்தியால் ஒரேவெட்டாய் வெட்டித் தூக்கிக்கொண்டு போய்க்கொஞ்ச தூரத்தில் குழிவெட்டிப்புதைத்துவிட்டுப்போய்விட்டார்கள்.

மணியகாரனே விடியற்காலத்திலெழுந்து, கொல்லைக்குப்போய்,கொலையாளிகளைக்கண்டு, "இராத்திரி வேலை தீர்த்துவிட்டீர்களா? என்று கேட்க அவர்கள் நடந்த சங்கதியைச்சொல்ல, சந்தோஷத்தோடு பத்து நாழிகைக்கு வயல்களைக்சுற்றிப்பார்த்து விட்டு வீடுவந்து சேர்ந்தான்.

இதற்குள் பிராமணர் அதிகாலையில் எழுந்து, ஸ்நான சந்தியாவந்தனாதிகளை முடித்து, மணியகாரனாகிய நாடான் வீடு சென்று, அவன் மனைவியைக்கண்டு, நகைமுதலியவற்றைக்கேட்க, அவள் உள்ளேபோய் மரக்கா

லோடு கொண்டுவந்து பிராமணனுடைய வஸ்திரத்தில் கொட்டினாள். அந்தணர், இரத்தினத்தை யிழந்தவஸ்தைப்பட்ட நாகமீண்டு மதனையடைந்தாற்போற் சந்தோஷமுற்று, "நான் பிழைத்தேன், என் கந்தையும் பிழைத்தது," என்று ஓட்டம் பிடித்தார்.

முன்சிப் வீடுவந்ததும், மனைவியையழைத்து, "பாப்பான் கொடுத்த நகைகளை எடுத்தா பார்க்கலாம்" என, அவள், "பாப்பானிடங்கொடுத்து விட்டேனே!" என்றாள்; உடனே நாடான் திடுக்கிட்டு ஒன்றுந்தோன்றாமல் திப்பிரமைகொண்டு கொலையாளிகளிடம்போய் "யாரையடா கொன்றீர்கள்? காட்டுங்கள் பார்ப்போம்," என்றழைத்துப்போய் குழியைத் தோண்டிப் பார்க்க, தன் மகனுயிருந்தமையால், புத்திரசோகத்தினால் கோவென்றலறி ஓர் பாறையில் முட்டிக்கொண்டு பிராணனை விட்டான். இதைக்கேட்ட அவன் மனைவியும், தன் பிள்ளையும் புருஷனுமிறந்தபின், நமக்கென்ன வாழ்விருக்கின்றது, என்னுங்கிலேசத்தினால், கத்தியால் தன்னுயிரை மாய்த்துக்கொண்டாள்.

சுப்பிரமணிய சாஸ்திரிகள் நாமக்கல் போய்ச்சேர்ந்து, கௌரியம்மாளை விதிப்படி மணந்து, இந்திரபோகத்தையனுபவித்துச் சுகித்திருந்தார்.

இதனைப்பரியாலோசிக்கும்பொழுது, ஈசுவர சிருஷ்டியில், வலியப் பிராணிகளுக் கெளிய பிராணிகள் பக்ஷண யோக்கியமுள்ளவைகளாயிருந்தாலும், அவைகளுடைய புண்ணிய கருமங்களே துக்கசாகரத்தைக்கடப்பதற்குத்தோணிபோன்றிருக்கின்றன. சாஸ்திரிகள், ஈசுவரபக்திமானுயிருந்தமையால், அவரை, ஆபத்துநேரிட விருந்த விடத்தினின்று நீக்கிக்காப்பதற்குக், கடவுள் கடமைப்பட்டவராயினார். ஆதலால், எப்படிப்பட்டவர்களாயினும், தெய்வபக்தி முதலிய புண்ணியச்செயல்களை யிடையறாது மெய்யன்போடு செய்து வருவார்களாயின், அவர்கட்கு, ஆன்மிக, தைவிக, பௌதிகங்களால் உண்டாகும் துன்பங்களொழிந்து போமென்பதற்குச்சாட்சியாகவிருக்கின்றது.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு."

என, தெய்வப்புலவர் கூறியது மிக்கதைக்கு நிதர்சனமாம்.

ஆச்சரியமான ஓர்நிகழ்ச்சி.

சேலம் ஜில்லா உசூரில் சூடேசுவரர் கோயிலென்று ஓர் சிவஸ்தலமுளது. அவ்வூர் கன்னடதேசத்தைச்சேர்ந்ததாகையால், அவ்வூரிலுள்ள ஜனங்கள் அந்த சுவாமியைத்தங்கள் குழந்தையைப்போல் அன்புபாராட்டி பக்தியினால் "சூடப்பா சூடப்பா" என்றழைப்பார்கள்.

அத்தேவாலயத்தில் சுவாமிக்கு சாத்தப்பட்டிருந்த சுவர்ண கவசத்தை நெடுநாளாய் அபகரிக்கும்படி எண்ணங்கொண்டிருந்த அவ்வூரிலுள்ள சில திருடர்கள், ஓர்நாள் சமயம்பார்த்து சகாயமாய் ஓர் பிராமணனை அழைத்துக்கொண்டுபோய், கோயிலுக்குட் புகுந்து, திருடர்கள் வெளிபிரகாரத்தில் நின்றுகொண்டு, பிராமணனை கெர்ப்பகிரகத்திற்குள் சென்று சுவர்ணக்கவசத்தை யெடுத்துவரும்படி ஏவ, அவ்வந்தணன் கெர்ப்ப கிரகத்திற்குச்சமீபத்தில் போகும்பொழுதே அவன் கண்களுக்குக்குத்துவலியுண்டாகிப் பார்வை மறைந்து போய்விட்டது. உடனே அம்மறையோன், திகில்கொண்டு கண்வலி சகிக்கமாட்டால் கண்போய்விட்டதாய் கூக்குரலிட்டுக்கதறினன். வெளியிலிருந்த திருடர்கள் அக்குரலைக்கேட்டு பயந்துகொண்டு ஓடிப்போய் ஒளித்துக்கொண்டார்கள். இந்த பிராமணன் மட்டும் வழிதெரியாமையால், அங்கேயே சுற்றிச்சுற்றிக்கைகளாலும் கால்களாலும் வழிதேடிக்கொண்டு, அவ்விடத்திலேயே அழுதுகொண்டிருந்தான். அச்சமயத்தில் சந்தியாகாலமாயிருந்தமையால், பூஜைக்காக கோயிலுக்குள் வந்த அர்ச்சகர் அங்கு நிகழ்ந்தவைகளைத்தெரிந்துகொண்டு, வெளியிலோடி அக்கம்பக்கத்திலுள்ளவர்களை யழைத்துக்கொண்டு கோயிலுக்குள் வந்து, அவ்வந்தகனைக்கண்டு நடந்த சங்கதியைக்கேட்கவே, அந்தகன் பயந்து, உண்மையைச்சொல்லி, நான் தெரியாமல் செய்த இக்குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று அவர்களை வேண்டிக்கொண்டு, சுவாமியையும் பிரார்த்தித்துக்கொண்டான். உள்ளே போனவர்கள், அவனை வெளியில் வாவென்று கையைப்பிடித்தழைத்துக்கொண்டு வெளியில் வந்தார்கள். கோபுரவாயிலுக்கருகில் வந்தவுடன், அந்தணனுக்கு முன்போலவே கண்கள் பிரகாசமாகத்தெரிந்தன. அவனைப்பிடித்துக்கொண்டு வந்தவர்கள், இந்த ஆச்சரியமான செயலைக்கண்டு அவ்வந்தணனை ஒன்றும் துன்புறுத்தாமல் விட்டுவிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியானது இக்கலியுகத்தில் தெய்வம் உளதென்பதற்கு நிதரிசனமாகத்தெரிவிக்கின்றது.

சமாசாரக்குறிப்புகள்.

முசிரி தாலூகாவிலும், கடைசியாக திருச்சினாப்பள்ளி தாலூகாவிலும் தாசில் வேலைபார்த்து பென்ஷன் பெற்றிருக்கிற மகா-ா-ா-ஸ்ரீ எஸ். அண்ணாமலை பிள்ளையவர்கள் துறையூர் ஜமீன்ஏஜண்டாராக நியமிக்கப்பட்டு சார்ஜு பெற்றுக்கொண்டு ஜூலைமீ 18உ முதல் வேலைபார்த்து வருகிறார். இவர் சர்க்கார் உத்தியோகஸ்தராக வெகுநாளாயிருந்து வந்த காலத்து குடிகளின் நன்மை தீமைகளை நன்காராய்ந்து நடந்துவந்தவர். எப்

பொழுதும் தருமசிந்தையிலிருப்பவர். துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்வதில் அதிசமர்த்தர். பேய்மேய்ந்தகாடாய்த்தந்தலை நாட்டாமையாயி ருந்துவந்த இந்தசமஸ்தானம், இனி இவர்காலத்தில் தருமந்தழைத்தோங்கப் பெறுமென்பதில் ஐயமில்லை. ஆனால், ஜமீந்தார் அவர்கள் தன் ராஜ்ய சம மந்தமான சகலகாரியங்களையும் தம் நூதன மந்திரியாரின் கருத்துக்கிணங் கி நடப்பிவிப்பரேல், கூடிய சீக்கிரத்தில் இந்த ஜமீனுக்குப் பேரும் பிரதி ஷ்டையும் கௌரவமும், கெவரன்மெண்டார் ஆதரணையுமுண்டாமென்ப து திண்ணம். இந்த ஜமீனில் எமக்குத்தெரிந்தநாள்முதல் அனுவசியமான சிவில் விவகாரங்களிலேயே வெகு திரவிய நஷ்டமும், உற்றோர் பெற்றோ ரிடத்து அன்புக்குறைவும் உண்டாகிக்கொண்டிருக்கிறது. இவ்வமைச்சர் காலத்து அவ்விதத்துன்பங்களெல்லாம் 'சூரியனைக்கண்ட பனிபோல்' நீங் கிச் சிறப்படையுமென்று எண்ணுகிறோம்.

சிக்கித்தம்பூரில், கிராம பௌரோகிதர் வீட்டில், சுவயம்பாகஞ்செய் து கொண்டிருந்த ஓர் முன்குடுமி பிராமணனும், அந்த வீட்டுப்பண்ணையா ளும் தங்கள் வறுமையின் கொடுமையால் தம்மெஜமானன் வீட்டிலேயே சுமார் ரூ. 2000 பெறும்படியான நகைகளைச் சென்ற வைகாசிமாதத்தில் ஓரிரவில் வீட்டிலொருவருமில்லாத சமயம்பார்த்துத் திருடிக்கொண்டுபோ னார்கள். இவ்விருவருக்கும் களவுசெய்வதில் அனுபவமில்லை. சோழியன் தான் திருடிவந்த நகைகளைத்தன்வீட்டில் குடியிருந்த ஒருவனை வைத்தி ருக்கும்படி கொடுக்க அவனுடைய யோசனையின்பேரில் ஓர் ஜலமுள்ள கிணற்றில் போட்டுவிட்டான். பண்ணையாளும் நூதனத்திருடனானபடியால் தன்வீதப்படிக்குள்ள திருட்டுசொத்துக்களைத் தகுந்த பந்தோபஸ்து செ ய்யத்தெரியாதவனாய்த்தன் மேல்வேஷ்டியில் முடிந்துத்தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு, மருநாள் மாலையில் வீதியில் பித்தனைப்போல் திரிந்து பிறகு, ஓர் வீட்டின் பறணியில் ஒளித்து வைத்தான். இவர்களுடைய அவி வேகமான செய்கைகளினாலேயே கிராமவாசிகள் இவர்களைத் திருடர்களெ ன்று அறிந்து போலீசாரிடமொப்பிவிக்க, அவர்களுமிவ்விருவரையும் சார்ஜ் செய்ததின்பேரில் முசிரி டிவிஷன் முதலாவது வகுப்பு மாஜிஸ்திரேட் டார் அவர்களால் இவர்கள் குற்றவாளிகளெனத்தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொ ருவனுக்கும் ஒவ்வொருவருஷம் கடுங்காவல் சிக்ஷை விதிக்கப்பட்டது.

சிறுவர்கட்கும் சிறுமிகட்கும் பயங்கரத்தை விளைவிக்கக்கூடிய ஓர் சேஷ்டையுள்ள பெருங்குரங்கினால் ந்யூடவுனிலுள்ளவர்கள் (New Town) அவஸ்தைப்பட்டதாய் மெயில் பத்திரிகை கூறுகிறது. அதைச்சுடும்படி

போலீசார் உத்தரவளித்தும் ஒருவராவது அந்த உத்தரவின்படி நடந்திலர். குரங்கோ பற்பல வஸ்துக்களை யழித்தது. ஒரு சமையத்தில் ஓர் வீட்டிற்குள் நுழைந்து ஓர் கைக்கெடியாரத்தை எடுத்து ஜாக்கிரதையாய் அதைப்பரிசோதிப்பதாய்ப்பாவித்து 'டிக்' 'டிக்' சப்தத்தினால் நடுநடுங்கித் தரையில் எறிந்தது. அதே மாதிரி ஓர் டைம்பீசையுஞ்செய்தது. அதற்குப்பூனையினிடம் பகையென்பதைத்தெரிவிக்க இரண்டு பூனைக்குட்டிகளைக்கொன்றது. அதைப்பிடிக்கும்படியாய்ச்செய்த எவ்வித முயற்சியும் பலியாது கடைசியில் போலீசாராலேயே ஓர்பெட்டியில் பிடிக்கப்பட்டு வெபெரி (Vepery) போலீஸ்ஸ்டேஷனில் கைதியாக்கப்பட்டது.

சுகாதாரத்தைப்பற்றிய விசேஷக்குறிப்புகள்.

1. சுகத்தைப்பற்றிய விதிகளை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டிலேயே மன உச்சாகத்துடன் பாதுகாத்து நடத்திவரல்வேண்டும்.

2. சுகமென்னும் பெரும்பேற்றை ஒவ்வொருவரும் தன் தன் விவேகத்தைக்கொண்டு அடையவேண்டும்.

3. ஜனபாகுள்யமதிகமாயிருக்கும் நகரங்களில் வீடுகள் எவ்வளவிற்கெவ்வளவு அதிகமோ அவ்வளவிற்கவ்வளவு மரணமுண்டாகும்.

4. பூர்வகாலங்களில் கிரகங்களின் கோளார்களினால் தொத்து வியாதிகள் உண்டாயினவென்று சிலர் தப்பான அபிப்பிராயத்தைக்கொண்டிருந்தனர்; சுகாதார விதிப்படி தகுதியான வீட்டையமைத்துக்கொள்வதால் அவை விலகும்.

5. வீட்டை சுத்தமாய் வைத்துக்கொள்வதில் கெவனிக்கவேண்டிய அம்சங்களாவன:—

(1) தன் மனதிற்குச்சரியான யிடமமைத்துக்கொள்ளல்;

(2) சுத்த வாயுவியாபித்தல்;

(3) தேகசுகத்திற்கும், பானத்திற்கும், பாகத்திற்கும் நல்ல தண்ணீர் இருத்தல்;

(4) வீட்டைச்சுற்றிலும அப்போதைக்கப்போது சேரும் அசுத்தங்களை அப்புறப்படுத்தல்;

(5) ஈரமில்லாமல் போதுமான விஸ்தீரணமுள்ள இடம் பெறல்;

(6) சீதோஷ்ண வருஷங்களாலுண்டாகும் பாதையில்லாதிருத்தலாம்.

6. பூமியில் தாதுவஸ்துக்களுண்டாகின்றன; அது பிராணிகளின்

மலமூத்திராதிகளோடுஞ் சம்மந்தப்பட்டிருக்கின்றன.

தீர்த்தபுரி.

இவ்வாறு சொல்லிய தூதுவனுடைய துக்ககரமான மொழிகளைக் கேட்ட சின்ன ஜமீந்தார் சோகமுற்று, சற்றுநேரம் வாளாவிருந்து, மனந் தேறி ஆயினுங்குளத்திற்கதிகயோசமுண்டாகாமல் காத்ததிருவருட்செயலை நினைந்து கடவுளைத்துதித்துக்கொண்டு, மீண்டும் தூதுவனை நோக்கி, "நமது மனைவியின் விருத்தாந்தங்கள் எத்தன்மைய? அதனையுங்கூறுக," வென அத்தூதுவன் பின்னருமியம்பலாயினன். 'மன்னர் சிகாமணியே! அரசன் தங்களுடைய சிரந்துணித்தற்பொருட்டு கொலைக்களத்திற்குக்கொண்டு போகும்படி கொலையாளிகட்காஞ்ஞை செய்தமையைக்கேள்வியுற்ற நுமது மனைவியார், கிலேசக்கடலில் மூழ்கி யொன்றுந்தோற்றுமற்பிரமித்து, 'என்னன்பர்க்கா! இத்தகைய கொடுந்தண்டனை வரவேண்டும்! தெய்வமே!' என்று சொல்லிக்கூரிய சரந்தைத்து வீழ்ந்த பிணைமான் போலவும், வேடன்பாலர சவன்னத்தை யிழந்துழலு மோதிமப்பிடை போலவும் துள்ளித்துள்ளியும், பறந்து பறந்தும், கீழேவிழுந்து கோவென்றலறி, 'பிராண நாதா! உம்மை இழந்ததின்பின் இவ்வுலகவின்பத்தை யனுபவிக்கக்கருதி வைதவ்யத்தைய டைந்து, உயிருடனிருப்பேனு! இதோ உம்முடன் வருகின்றேன், உமது திருமுக மண்டலத்தை என்கண்குளிரப்பாராமலும், உமது கிருபைநிறைந்தஇனியசொற்களைக்கேளாமலுமிருக்க வைத்துப்போவதுதருமமா? அடிச்சியேன் உமக்கென்ன தீங்கிழைத்தேன்! என்பாவி உயிரே! என்னுயகர் உயிரிழக்கப்போவதையறிந்து நீ இன்னும்போகாமலிருக்கின்றனையே; இவ்வண்ணமிருப்பதுதான் கற்பென்றுணர்ந்தனையோ! ஐயோ! இன்று இக்கதியையடைய யாவர்முகத்தில் விழித்தேன்! என்னையிவ்விளமைப் பருவத்தில் சுகமிழக்கப்பண்ணின பிரமனும், இவ்வரசனும் தத்தமனைவியர்களோடு இன்புறுவார்களா? என்னுடைக்கணவர் யாவருக்குமென்னுளுமிதத்தைச் செய்திருந்தனரேயன்றி, ஒருநாளுமொருவருக்காயினுந் தீங்கிழைத்திலர் என்னும் அவரது புகழ் உலகமெங்கும் பரந்திருக்கின்றதே! அத்தகையாரை உயிர்கோறற்குக்கொலையாளிகள் மனமெவ்வண்ணந்துணி வுற்றதோ பலசொல்லியென்? நாமுமுயிரை மாய்த்துக்கொள்வதே கடமையன்றி, பிறிது வழியில்லை,' என்றிவ்வாறு புலம்பித்தவித்துக்கொண்டிருக்குந்தருணத்தில், தங்களுயிர்த்தோழராகிய இரண்டாவது மந்திரியார் அங்ஙனமுற்றுத் தேவியாரலங்கோலத்தைப்பார்த்து, 'அன்னைமீர்! வருந்துதலொழிமின்! வருந்துதலொழிமின்!!' எனலும், அவருக்கு துக்கவெள்ளம் பெருகி கைகளான் முகத்திலறைந்துகொண்டும், கண்கள் சிவக்க நீரைப்பொழிதலால் அருவியெனப்பாய

வும், முகம் ஒளியிழந்து வீக்கமுற்றிருப்பக்கிழேபுரண்டழத்தொடங்கலும் சமீபத்திற் சென்றவமைச்சர், 'நுந்தலைவர்க்கு யாதொரு தீங்கும் வந்திலது, நீவிர் அழுன்மின்! அழுன்மின்!! என்னுடைய சொற்களை செவிப்புலத்தோர் ந்ததின்பின் நுமக்கேற்றவாறு செய்மின்;' என்றவரது அழுகையைத் தணி த்துத், தங்களைக் காசிக்கனுப்பியிருக்கின்ற உபாயத்தை அவர்பாற்சொல்லி, இந்த இரகசியத்தை வெளியிடன்மின்; பெண்ணியல்புடையாரிடத்து இரக சிய மொழிகளைக்கூறலாகாதென்று நீதிகளிற்கூறியிருப்பினும், இந்த இரக சியத்தை உமக்குச்சொல்லவேண்டியது அவசியமாயிருந்தமைாற் சொல்லி னேன்; இந்த சங்கதியைக்கனவிலாயினு மறந்தாயினும் பிறருக்கு வெளிப்ப டுத்தன்மின்; உம்மைக் காண்பாருக்கு அமங்கலத்வ முடையீரைப்போல் அபிநயித்தல் வேண்டுமெனவுஞ் சொல்லித்தேற்றியும், நாடோறும் இரண் டுவேளைகளிலும் அந்தப்புரத்திற்குப்போய்த்தங்கள் காதலியாரைக்கண்டு அவருக்காறுதலாக தமயந்தி, சந்திரமதி, ஜானகி இன்னும் இவர்களைப் போன்ற பதிவிரதா சிரோன்மணிகளின் சரித்திரங்களை உபமானமாக எடு த்துக்கூறி, 'பூர்வயுகத்திலேயே மகிமைதங்கிய மாதரசிகளை விதிவலியாட்டி ற்றென்றால் அவ்வூழ்வலியும்மை யிவ்வாறு செய்தது ஆச்சரியமா! பொறுத்தி ருமின்; உமது காதலர் சின்னாளிலிவண் வருவார்;' எனச்சொல்லித்தெளிவி த்தும், நும்மாலனுப்பப்படுந்திருமுகங்களை யவர்பாற்றந்து அதிலுள்ள சங் கதிகளை யறிவித்தும் பாதுகாத்து வருகின்றனர். தங்கள் திருமுகத்தைப் பெறும்போதெல்லாம் களவியற்காதலனாற் கொடுத்தத்தழையினை யேற்ற வரை வாணர் மங்கைபோலவும், ஸ்ரீராமபிரானாற் கொடுப்பித்தத் திருவாழி யினையேற்ற சீதாபிராட்டியைப்போலவும், அவ்வன்னையார் தேகத்தில் மயி ர்சிலிர்த்தலும், கண்ணீர்ப்பொழிதலும், உடல் வெதும்புதலும், அழுகை யும், புன்முறுவல் பூத்தலும், தெய்வத்தைத்தொழுதலும், மகிழ்தலும், அங் கிருபத்தோடு பிணங்குதலும், முயங்குதலுஞ் செய்து முத்தமிட்டு, கண்க ளிலொற்றிக்கொண்டு பெருமூச்சு விடுவார்.

இஃதிங்கனமிருக்க, நாடோறுமெலிந்த தேகத்தையும், ஓய்ந்த நடை யினையுமுடையவராய் நும்மைக்காண வேண்டுமென்னு மாசையால் சுவைய ற்ற அற்பவாகாரங்களைச்செய்து, தமதுயிரைப்பெரும் பாரமாகச்சுமந்து கொண்டிருக்கின்றார்: இதுதானுமது காதலியாரது செய்தி,' என்றான்.

இவ்வாறு தமது மனைவினியல்பையுணர்ந்த விளவரசர் சோக சமு த்திரத்தின் மூழ்கிப்பின்னர், ஒருவாற்றாற்கரை யேறித்தா துவனைச்சயனித் துக்கொள்ளுமாறு விடை தந்து, தாமுஞ்சயனித்துத் தம்மனைவியின் பரி தாப நிலைமையையெண்ணி யெண்ணி யுறக்கமின்றி விடியுந்தனையும் புரண் டு கொண்டிருந்தனர்.

விடியற்காலமாகவே யெல்லாருமெழுந்து முன்போலவே புறப்பட்டுபோய் இரண்டு மூன்று தினத்தில் துறைசையின் சமீபத்தில் வருமமையத்து அஸ்தமன சமயமாயிருந்தமையால், தன்னல் வரவை மந்திரிகட்குத் தெரிவிக்கும் பொருட்டு முன்னரேவப்பட்ட ஒற்றன், அவ்வண்ணமே மந்திரிகட்குத்தெரிவித்தனன். உடனே மந்திரிகள் பிரதானிகள் முதலிய யாவரும் எதிர்சென்று இளவரசைத்தரிசித்து, ஒருவருக்கொருவர் குசல பிரசனம்பண்ணி, சந்தோஷக்கடலின் மூழ்கித்தம்மைச்சூழ்ந்துவர அப்பெருந்தகையார், தமதரண்மனைக்குட் புகுந்து வீற்றிருந்தனர்.

அப்பொழுது சூழவிருந்த மந்திரி முதலினோரை நோக்கி, "எமது வரவைப்பற்றி இவ்விரவில் ஒருவருக்கும் சொல்லன்மின்; நாளையதினம் காலையில் இராஜசபையையெய்துவாம்; இப்பொழுது வழிப்போந்த இளைப்பாறுகின்றேன். "என்று சொல்லித்தமக்கடுத்த முதலமைச்சரை இருக்கச்செய்து, ஏனையோர் அவரவரில்லத்திற்குப்போம்படி விடையளித்தனர். அன்னோர் சென்றதின் பின், இருவருமெழுந்து அந்தபுரத்திற்குட் செல்லுங்கால், அத்தலைவியும், தலைவரும் ஒருவரையொருவர் கண்ணுற்று தேகமினைத்தநிலைமையால், இன்னாரெனத் தெற்றென விளங்காமையால் இவருக்கு நமது காதலியோ அன்றோ எனவும், அவட்கு நம் காதலரோ அன்றோ எனவும் ஐயுறவெய்திற்று. அப்பொழுது, அருகிலிருந்த மந்திரர்,இளவரசர துமனைவியாரைக்கண்ணுற்று, "இவர்தாம் நுமது காதலர் காண்மின்." என்றறிவித்தலும், அப்பெருமாட்டி துணுக்கமுற்றெழுந்து, சமீபத்திலெய்தி, முகக்குறி முதலியவைகளை, செவ்விதினுணர்ந்து, அவர்காலில் வீழ்ந்து, "என்னை இச்சிறுவயதில் அனுபவித்தற்குரிய நலனிழக்கப்பண்ணி நீவிரும்பரதேசியானீரே! இப்படிச்செய்வது உமக்குத்தருமமா?" என்று சொல்லிப்புலம்பினாள். அதற்கிளவரசர் தாமும் கண்ணீர்விட்டழுது, "என்றலைவிதி யிவ்வண்ணமிருந்ததே! யான் என்செய்யவல்லேன்?" என்று மறுமொழிகூறி, மனைவியைக்கைகளாற்றூக்கித்தழுவிக்கொண்டு பிரலாபித்தார். பக்கலிலிருந்தவமைச்சர், "கடந்துபோயின நிலைமையைப்பற்றி நீவிரிருவருந்துன்புறுவதிற் பயனென்னை? நீங்களின்னாள்வரையிலும், சதாசார சீலர்களாயும், சத்தியமன்றி பிறிதொன்று முணராதவர்களாயிருக்கின்றமையால், உங்களுக்குக் கடவுளினது பரிபூர்ணமான தயையினால், உங்களுயிரைப்போக்க மலைபோல் வந்த இப்பெரியவாபத்து நிவர்த்தியாயிற்று; எல்லாவற்றையுமுணர்ந்த உங்களுக்கு யான் சொல்லத்தக்கவை யாவுள? இப்பொழுது, இரவொருசாமத்திற்குமேற்செல்லுகின்றமையாற் போஜனஞ்செய்வதற்கேற்ற காலந்தவறி அகாலமெய்துகின்றது; ஆதலால் நீ விரும்ஸ்நாநாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு போஜனம்பண்ணிச் சயனித்துக்கொண்மின், யானுமவ்வாறு செய்து விடியலிலெழுந்து ஈண்டு வருகின்றேன்," என்று விடைபெற்றேகினன்

அத்தருணத்தில் பரிசாரகர்களும் சிலதியரு நீராடுதற்பொருட்டழைப்ப, அவ்விருவருஞ்சென்று ஸ்நாநம், அனுட்டானம், போஜன முதலியவைகளை முடித்துக்கொண்டு சயன கிரகத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

"மருங்கிலா நங்கையும் வசையிலையனு
மொருங்கிய விரண்டுடற்குயிரொன்றாயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவிநீங்கிப்போய்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ!"

என்றிராமாயணத்திற் பர்த்தாவும், பாரியையுந் தம்மிற்பிரிந்து சிலநாட்சென்றதின்பின், இருவருங்கூடுங்கானிசழும், அன்பின் மிகுதியைக்கம்பர் விதந்துள்ளாராதலின், யாமுமதனைக்கூறுவ தவசியமின்றாயிற்று. அதன்பின், அவ்விருவரும், புட்பசயனத்தில் வீற்றிருந்து, தாங்களிருவரும் பிரிவுற்றதற்கு முன்னரும் பின்னருமுள்ள விருத்தாந்தங்களைக்கலந்து பேசி, தாம்பூலபுட்பதாரணஞ்செய்துகொண்டு, இளவரசர் தமதுகாதலியைக்களிப்பிக்கக் கருதி, அவள் பால் கலவி செய்யத்தொடங்கலும்,

வெங்கோடை யினிற்பயிலு மொருபிணமான்
மலர் துதைந்து மிளிருநன்னீர்
பொங்கோடை புகுந்தினிது விளையாடு மாறென்னப்
புரிமென் கூந்தல்
கொங்கோடை மலர்முகத்துக் கொம்பனையாள்
கணவரொடுங் கூடிப்பைம்பொற்
சங்கோடை யலர்கரத்தாற் றழீஇச் செயுமவ்
வியல்பியம்புந் தரத்ததன்றே.

மழையேற்ற கருங்குழலார் மகிணரினி தளித்தபசுந்
தழை யேற்றன் னவரெய்துந் தன்மையிற்றா மின்புறுவார்
குழையேற்றத் திருமுகத்திக் குலக்கொடியாள் கொழுநன்றன்
னுழையேற்றுப் பெறுமுவகை யாமுரைக்குந் தகைமைத்தே.

இவ்வாறு லீலைபுரியும் தமது மனைவியின், காதன் மிகுதியை யமைச்சருணர்ந்து புன்னகைசெய்தலைக்கண்டு நாணந்தலைக்கொண்டுடி சிறிது நேரஞ்சென்ற பின்னருங் கூடவேண்டுமென்றவாவினால் தன்னாயகர் முகத்தைமீளவு நோக்கினாள்.

அப்பொழுது,

அற்பெனுங்கடலிடை யாழ்ந்த வன்னவர்
பொற்புறுவிழி தமிற்புல்லிக்கொண்டன
விற்பயில்சேயொளி விளங்குதாமரை
யுற்பல மலரொடு முறவுகொள்வபோல்.

அருப்பினிற் பொலிமுலைபசல மன்னதோள்
விருப்பினிற் றைத்தரும்புளகம் வேய்வன
பருப்பத நடுக்குறவிகலிற் பாய்பறைச்
சுருப்புறு கடமலை துன்னல் போலுமே.

இருவருமிவ்வாறு செய்தபுணர்ச்சியால் பரவசமுற்று கிரீடையினாலுண்டாய வருத்தந்தணிய அயர்ந்து நித்திரை செய்தார்கள். டி. பி. வி.

AN APOLOGY TO OUR SUBSCRIBERS.

பத்திரிகாநேயர்கட்கு ஓர் விஞ்ஞாபனம்.

“எண்ணியொரு கருமம் யார்க்குஞ் செய்யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணில்லான்
மாங்காய்விழ வெறிந்த மாத்திரைக்கோலுக்குமே
யாங்காலமாகுமவர்க்கு.”

என்னும் நீதிமொழிப்படி, இவ்வுலகத்தில் புண்ணிய கருமங்களைச்செய்பவர்கட்குப் பல இடையூறுகள் உண்டாவது இயல்பென்பது யாவரும் அறிந்த விஷயம். இம்மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிக்கையில் எழுதப்பட்டு வருகின்ற விஷயங்களைத் தமிழுணர்ச்சியற்ற சிலர் பொறாமை மேற்கொண்டு தங்களொழுக்கத்தை இகழ்ந்து கூறியிருப்பதாய் எண்ணி, இப்பத்திரிகைக்கு அனுகூலமாய் நன்முயற்சி செய்பவர்களை அவமதித்து, அசிரத்தை உண்டுபண்ணுவதினாலும்; அத்தகைய செய்கை யுடையார்க்கு அனுகூலமாகவே எமக்குத்தேகத்தில் நோயினால் அசௌக்ய முண்டாயினமையாலும்; அவ்வாறே எமது குடும்பத்தில் வியாபகர்களாகியசகோதரர்களும் இவ்வரிய விஷயத்திற்கு உதவி செய்யாவிடினும் நம்மாலியன்றகெடுதியாவது செய்ய வேண்டாமா வென்னுங் கருணையினால் இடையூறு செய்ய முயல்வதனாலும் இப்பத்திரிகையை மாதந்தோறுங் குறித்த காலங்களில் வெளிவரக் கூடாமல் தாமதப்பட்டது.

‘விவேகசிந்தாமணி’ யென்னும் பத்திரிகையில் ‘சுகுணசுந்தரம்’ என்னுமோர் தமிழ்க்கதை எழுதிக்கொண்டுவருகிற யாம் இத்தமிழ் நாட்டில் தமிழ் பத்திரிகைகள் சிற்சில வழங்கி வருகிறதுடன், தமிழ் அபிவிருத்தியின்பொருட்டும்; அரிய தமிழ்க்கல்வியிற் சிறந்த புலவர் சிகாமணிகளின் சகாயத்தை யெய்து தற்பொருட்டும்; தமிழைக்கற்க விரும்பும் சிறுவாகளாதியோர்க்குப் பயன்படுதற்பொருட்டும்; எமது நண்பர்கள் பலதடவைகளில் எம்மை யிதுவிஷயமாய்த் தூண்டினமையால், ‘சுகுணசுந்தரம்’ எனப் பெயரிய இப்பத்திரிகையை வெளியிடத் துணிந்தனம்: இப்பத்திரிகையில் வரையப்படும்விஷயங்களில் காணப்படும்குணங்களை எற்றுக்கொண்டு, தோஷங்களை வர்ஜிக்க வேண்டுமென்று உணர் வுடையார்க்கு யாம் சொல்ல வேண்டிய வவசியமின்று; நூல்களில் மக்கட் பிறப்பினை யுடையார்க்குச்செய்யத் தக்கன இவை, செய்யத் தகாதன இவை என்று கூறி யிருப்பதை யுணர்ந்து, தகாத செயலுடையார் அச்செயலைப் பரிகரிக்க முயலாது, அந்நூல் செய்தாரோடு முரணிக் கொள்வது அவரது மடமை யென்னாது வேறு யாதென்று கூறுவோம்! தீய செயலை செல்வச் செருக்கினையுடையார் செய்தால் நற்செயலாய்விடுமா? உலகத்தில் நிகழ்பவைகளையும், தர்மாதர்மங்களையும் மனிதர்கட்கு லோகோபகாரமாய் அறிவிக்க வெளிப்படும் இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களில் தங்கள்தீச்செயலுக் கொத்திருப்பவைகளை மாத்திரம் கெவனித்துப் பார்த்துப் பொறாமை மேற்கொண்டு கூறு மொழிகட்குச் செவிகொடாமல் இப்பத்திரிகாபிமானிகள் இயன்ற உதவிபுரிவார்களென நம்பி இதனைவிடாமுயற்சியாய் நடத்திவருகின்றோம்.

மேற்சொல்லிய இடையூற்றினாலுண்டாய குறைவை நிரப்புதற்பொருட்டே நான்காவது ஐந்தாவது சஞ்சிகைகளை அக்டோபர்மாதத்தில் ஒரேபுத்தகமாய் வெளியிட்டுப்பிறகுமாதந்தோறும ஒவ்வொரு சஞ்சிகையாய் வெளியிட்டு வரப்படும். மேலே சொல்லியவெண்பாவில் கூறியவண்ணம் நேர்ந்தகுற்றம் எம்மநதாரச் செய்ததொன்றன்மையால், சாதுக்கள் மன்னிக்க வேண்டுகின்றோம்.

Proceedings of a central class held at Admankottah on Sunday the 17th June 1902. Dharmapuri Taluk.

Chairman.

M. R. Ry. G. Krishna Iyer Avergal, Vice-President and Superviser of Schools, Dharmapuri Taluq.

PRESENT:—

1 „ D. Venkatramana Iyar, Head master Board School, Adamankottah.
2 „ L. Venkatramana Iyar, 2nd Master Adamankottah.
3 „ L. Ramakrishna Iyar, 2nd Master Laligam.
4 „ V. Ramaswami Iyar, 2nd Master Laligam.
5 „ P. Kandasami Iyar, Head MasterH. P. B. School, Dharmapuri.
6 „ N. Ramaswami, Teacher B. Panchama School, Sorakai patti.
7 „ A. V. Krishna Row, Teacher, Board School, Venkattampatti.
8 „ Vazuvadeen Sahib, Teacher R. C. Mission School, Kovilur.

Art 72, 73 Section B. of the Chapter v. were read and explained to the members for the Collection of G. Form applications for this year.

2. Art 90. Section E. of the same Chapter was also read and Explained to the members.

3. All the members were also instructed to advise other teachers to Submit G. Form application within 10 days.

4. Some of the uncertificated teachers were also advised to remit one Rupee for Practical test.

5. Read also the memo No,746 dated the 5th June 1902 of the Sub assistant Inspector of Schools, Husur Range, noting with regret that the meetings of the Teacher's association have of late not been regularly held and that copy of the Proceedings is not Submitted regularly.

6. Resolved that the Secretary or assistant Secretary be punctual in his duty.

(Signed) G. KRISHNA AIYAR,
Chairman.

(True copy)

(Signed) D. VENKATARAMANA AIYAR,
Secretary of the Teachers' Association,
Adamankottah.

LIST OF GENTLEMEN WHO PATRONIZE THE SUGUNASUNDARAM.

1 Sri Ambalavana Desikar Pandara Sannithi, Thiruvavaduturai.
2 Sri Cithambara Sivaprakasa Pandara Sannithi, Turaiyur.
3 M. R. Ry. P. Pandithoray Thevar Avergal, Zemindar of Palavanthan.
4 „ Prasanna Venkatachalla Reddi Garu, Zemindar of Turaiyur.
5 „ S. Annamalai Pillai Avl., Pensioned Tahsildar & Manager, Zemindar's Office, Turaiyur.
6 „ A. Ganapathy Iyer Avl., Sub-Registrar of Turaiyur.
7 „ Srinivasa Aiyengar Avl., B. A., Sub Magistrate, Turaiyur.
8 „ V. Srinivasachariyar Avl., B. A., Sub Registrar, Dharapuram.
9 „ P. S. Venkatasubramania Aiyar Avergal, B. A., Stationery Sub-Magistrate, Trichinopoly.
10 „ T. A Swaminatha Iyer Avergal, B. A., S. H. O., Padalur.
11 „ T. K. Guruswami Aiyer Avergal, 1st Assistant, Board Middle School, Tirucoilur.
12 Brahma Sri Paramesvara Dhekshathar Avergal, Chidambaram.
13 M. R. Ry. Ramalinga Sastrigal Avergal, Appakudal-Bhavani.
14 Sriman Ramakrishna Battachariar Avergal, Sanskrit Pandit, Bhaskarapuram.
15 „ S. A. M. Seshadhri Achariar Avegal, Sanskrit Pandit, Chattsastra Vada Kulpaka tharu Vidyasala, Kumbakonam.
16 M. R. Ry. Kothanda Ramanujachariar Avergal, Head Master, Z. L. S. School, Turaiyur.
17 „ S. Madhurainayakam Pillai Avergal, Mirasdar, Abharanadhari, Sikkal.
18 „ S. Adaikalam Pillai Avergal, Pleader, Turaiyur.
19 „ M. S. Pathmanaba Iyer Avl., Pleader, Turaiyur.
20 „ K. Sankaralinga Mudaliar Avergal, Proprietor, Dodson Press, Trichinopoly.
21 „ T. S. Naga Ratnam Iyer Avergal, Clerk, Postal Supt's Office, Trichinopoly.
22 „ T. V. Venkata Rama Iyer Avergal, Clerk, Purnachandrodaya Press Tanjore.
23 „ G. Krishnier Avl., Supervisor of Schools, Dharmapuri Tq.
24 „ P. K. Arthanari Iyer Avergal, Erode.
25 „ G. Krishnier Avergal, Goppichettipolayam.
26 „ T. Srikanta Iyer Avergal, Rev. Inspector, Dharapuram Tq.
27 „ G. S. Thondi Raja Iyer Avergal, Goppichettipolayam.
28 „ T. Venkataramana Aiyar Avl., Pleader, „
29 „ Ramanuja Iyengar Avl., 2nd Grade Pleader, Srirangam.
30 „ Sathasivam Pillai Avl., Supervisor of Schools, Cuddalore.
31 „ Rama Iyer Avergal, do. Srirangam.
32 „ Venkatarama Iyer Avl., Banglore-Cantonment.
33 „ Marudamuthu Padayachi, Contractor Turaiyur.
34 „ S. Muthu Aiyar Avl., B. A., H. H. School, Musalipatam.